பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில்: 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 7உ (21—6—67) புதன் ★ வெளியூர்: ஆனி 8உ (22—6—67) வியாழன் [இதழ்: 6

வேலைத் துறையில் இந்தியாவின் இழப்பு!

வேலை நடைபெறாமையால்: கடந்த ஆண்டில் இந்தியா ஒரு கோடி மனித நாட்களை இழக்க நேரிட்டது.

ஒரு மனித நாள் என்பது, ஒரு மனிதர் வேலை செய்யக்கூடிய 8 மணி நேரத்தைக் குறிக்கும்,

இது, 1965-ஆம் ஆண்டைய இழப்பைவிட 50 சதவிகிதம் அதிகமாகும்.

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

'பட்ஜெட்' விவாதத்தின் இரண்டாம் நாளான செவ்வாயன்றும் காங்கிரசு உறுப்பினர்தான் உரையைத் துவக்கினர். சிக்கனம் குறித்து அரசு அமுலாக்கி வரும் 'வேலை நீக்கம்' பற்றி முதலமைச்சர் தந்த விளக்கம், காங்கிரசு உறுப்பினர் பொன்னப்ப நாடாரை, 'நன்றி' என்று சொல்லும் அளவுக்கு திருப்திப்படுத்தியிருக்கிறது.

".........வேலை வாய்ப்புதான் அளவுகோல் என்றால், மின்சார விசிறிகளையெல்லாம் எடுத்துவிட்டு பனை ஓலை விசிறியை அமுலாக்கினால் ஒரு கோடி பேருக்கு வேலை கொடுக்கலாம்; 'அரிசி ஆலைகளே கூடாது; கைகுத்தல் அரிசியே வேண்டும்' எனக் கூறினால், 10 இலட்சம் பேருக்கு வேலை கொடுக்கலாம்; வேலை வாய்ப்பு என்பதற்காக இப்படியெல்லாம் பேசலாமா?" என்று முதலமைச்சர் விளக்கியிருப்பது, தமிழக அரசின் சிக்கன நடவடிக்கை—ஒரே வேலையை இருவர் செய்யும் 'டுப்ளிகேட்' முறை ஒழிப்பு—போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராகக் காங்கிசார் செய்யும் தவறான பிரச்சாரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருக்கிறது!

"அரசியல் கூட்டங்களில் வன்முறைகளை எல்லாக் கட்சிகளும் சந்திக்கின்றன; தேர்தல் வெப்பம் தணியவில்லை; விளையாட்டாக சிலர் செய்வது வினயமாகவும் முடிகிறது; இதையெல்லாம் கூறி, காங்கிரசு மட்டும் துன்புறுத்தப்படுவதாகப் பேசக்கூடாது; 'இத்துறையில் போலீசும் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை' என்று கூறி, தவறான நோக்கமும் கற்பிக்கத் தேவையில்லை; அப்படியே இருந்தாலும், 20 ஆண்டுகளாக நீங்கள் அவர்களை அப்படி ஆக்கிவிட்டிருக்கிறீர்கள்" என்று குறிப்பிட்டு அண்ணா அவர்கள் தந்துள்ள மறுப்பு, இனியேனும் காங்கிரசுக்காரர்களை, பயனுள்ளவைகளைப் பேசி அரசியல் வளர்க்கும் பண்புக்குக் கொண்டு செல்கிறதா எனப் பார்க்க வேண்டிய ஒன்றாகவே இருக்கிறது.

"ஏழைகளுக்கு இந்தப் பட்ஜெட், ஒரு நம்பிக்கை நட்சத்திரம்" என்று கூறிய கழக உறுப்பினர் **வி. எஸ். கோவிந்தராசன், 'நாட்டு வறட்சியைப் போக்கவே நாவறட்சி ஏற்படும்படியாகப் பேசி, முதலமைச்சர் நிதிநிலை அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்'** என்று கவனத்தைக் கவரும் வகையில் பேசியிருப்பது, முதல் நாளன்று கருத்திருமனும் வருத்தப்பட்ட காங்கிரசு உறுப்பினரின் ஆட்சேபணைக்கு ஆளான பேச்சுக்குத் தக்கதொரு பதிலாக இருக்கிறது!

கழக உறுப்பினர் **எல். கணேசன்**, 'அண்ணாவின் பட்ஜெட் தீவிரமும் நிதானமும் கலந்தது' என்று குறிப்பிட்டிருப்பது, இரத்தினச் சுருக்கமான விளக்கமாகும்!

மற்றொரு கழக உறுப்பினரான **திருமதி பழனியம்மாள்**, கலப்பு மணம் புரிந்துகொள்வோருக்கு மேலும் பாதுகாப்பும் ஊக்கமும் அளிக்கும்வகையில், 'அவர்களுடைய குழந்தைகளுக்கு வேலை வாய்ப்புச் சலுகை—படிப்பு வசதி ஆகியவைகளும் தரப்பட வேண்டும்' என்று கூறியிருப்பதும், இதேவகையில் கழக உறுப்பினர் **வி. முனுசாமி** மேலும் ஒருபடி சென்று, 'மேல் வகுப்புக்காரர்கள் கீழ வகுப்பினரைத் திருமணம் செய்து கொள்ள முன்வந்தால், அதற்கு அரசு உரிய முறையில் உதவ வேண்டும்' என்று கோரிக்கை தெரிவித்திருப்பதும், சாதி பேதமற்ற சமுதாயத்தை முறையாக உருவாக்குவதில் கழகம் எந்த அளவுக்கு ஆர்வத்துடன் இருக்கிறது என்பதனை விளக்குவதாக இருக்கிறது!

இரண்டாம் நாள் கேள்வி நேரம் 'ஒளி'மிக்கதாக இருந்திருக்கிறது. ஒரு சில பிரச்சினைகள் குறித்து முதலமைச்சர் தந்துள்ள விளக்கம், 'பதில்' என்ற முறையில் இல்லாமல், 'நம்பிக்கை' என்ற வெளிச்சத்தையே தந்திருக்கிறது!

நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவுபடுத்தியிருக்கும் சேலம் இரும்பாலைப் பிரச்சினை, நேற்றைய கேள்வி நேரத்தின்போது அண்ணா அவர்களால் மேலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

"சேலம் இரும்பாலைப் பிரச்சினையில் தமிழக அரசு தானாகவும் அவசரப்பட்டு இறங்கிவிடாது; மத்திய அரசிடமிருந்து 'இல்லை' என்ற தெளிவான பதில் வந்தால் ஏற்று நடத்தவும் தயங்காது; போராட்டம், பதவி துறப்புப் போன்றவைகளை, தேவைப்படும்போது நடத்திக் காட்டவும் உத்தேசித்திருக்கிறது" என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், **மூன்று கோணங்களில்** நின்று பேசியிருப்பது, புதுடில்லிக்குத் தந்துள்ள **பொறுப்பும், நிதானமும்** மிகுந்த எச்சரிக்கையாகும்!

"இவர்கள் மனம் என்ன, இரும்பா?" என்று கேட்கும் வகையில், சேலம் இரும்பாலை பற்றிய கேள்வி நேரத்தில், காங்கிரசுக்காரர்கள், தர்மசங்கடமான மௌன நிலையில் இருந்திருக்கின்றனர்!

மத்திய அரசை அதிகப்படியாக இது குறித்துக் கண்டிக்கும் அரசியல் உரிமை பெற்றவர்கள் அவர்கள்! ஆனால் அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவரோ, 'மகன் எப்போது சாவான்—மருமகள் தாலி அறுக்கவேண்டும்' என்ற போக்கில், 'போராட்டம்—பதவித் துறப்பு எப்போது?' என்று ஆர்வத்துடன் கேட்டிருக்கிறார்!

"உறுப்பினரின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் இருக்கும்" என்று பதிலளித்துள்ள முதலமைச்சர், மற்றொரு காங்கிரசல்லாத உறுப்பினருக்கு விடையளிக்கும்போது, **'போராட்டத்தில் காங்கிரசுக்காரர்களும் இருப்பார்கள்—ஆனால், எதிர்த் தரப்பில்'** என்று விளக்கி, அவர்களது நிலையை மக்களுக்கும் எடுத்துக்காட்டியிருக்கிறார்!

"அரசியல் கருத்து வேறுபாடு காரணமாகக் கழக அமைச்சரவை, கதர்த் துறையை ஒடுக்க நினைக்கிறது" என்ற காங்கிரசுக்காரரின் தவறானப் பிரச்சாரத்துக்கு, 'கதர் ஒரு அலங்காரம்தான்; பொருளாதார முறைக்கு ஒத்துவராது; உற்சாகம் கொடுப்பதாகவும் இல்லை; **அரசியல் நாகரிகத்துக்காகக்** கதர் அபிவிருத்தியைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம்' என்று கூறி முதலமைச்சர், அத்துறையில் கண்ணியத்தைக் காட்டியிருப்பது, எதிர்க் கட்சியினரின் கருத்தில் பதியவேண்டிய ஒன்றாகும்!

"அரசு ஊழியர்களுக்கு, நகர பஸ்போக்குவரத்தில் கட்டணச் சலுகை அளிக்கலாம்" என்று இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் சி. கோவிந்தராசன் கூறியிருப்பது, சிந்தனைக்குரிய யோசனையாகவே இருக்கிறது!

ஏற்கனவே மக்கள் மத்தியில் பிரபலமாகிவரும் அரசினர் பஸ் போக்குவரத்துக்கு, இது, சிறு இழப்புதான்; எனினும், இரு சாராருக்கும் ஏற்றத்தைக் கொடுக்கக்கூடிய யோசனையாகவே தோன்றுகிறது!

'பஸ் போக்குவரத்து தேசியமயமாக்கப்படவிருக்கிறது' என்று பட்ஜெட் அறிவிப்பின்போதும் காங்கிரசுக்காரர்களின் வரிசை, அமைதியாகவே இருந்திருக்கிறது!

"பெரியாருக்கென்த் தனி மானியம் கொடுக்கவேண்டுமென்பதில்லை; இந்த அமைச்சரவையே அவருக்குத் தரப்பட்டிருக்கும் மானியம்தான்" என்று முதலமைச்சர் கூறியபோது, எல்லாத் தரப்பினரும் கையொலி எழுப்பி வரவேற்றபோது, காங்கிரசுக்காரர்கள் வரிசை மௌனம் காட்டியிருக்கிறது!

இதைச் சட்டமன்றத்துக்கு வெளியே உள்ள அரசியல் உலகம் உன்னிப்பாகக் கவனித்திருக்கிறது என்பதை, அக்கட்சியினர் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பதவி ஒழிப்பால் வேலையிழப்பு இல்லை!

அமைச்சர் சத்தியவாணிமுத்து பதில்

சென்னை, ஜூன் 20—

"கிராம சேவிகா—முக்கிய சேவிகாக்கள் பதவிகளை அகற்றிவிடுவதனால், அவர்கள் வேலையிலிருந்து நீக்கப் படமாட்டார்கள்"

என்று மகளிர் நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், தமிழகச் சட்டமன்ற மேலவையில், வினா ஒன்றிற்கு விடையளிக்கையில் உறுதி கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"பதவிகள் அகற்றப்படுவதனால் அலுவலர்கள் வேலை இழக்காதபடி கல்வித் துறைக்காவது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட வேலைகளுக்காவது சேர்த்துக் கொள்ளப்படுவர்.

'அப்ரூவர்?'

"அரபு – இஸ்ரேல் போரில் அமெரிக்காவும், பிரிட்டனும் இஸ்ரேலுக்கு ஆதரவாகப் போர் விமானங்களை அனுப்பி உதவின என்பதற்குத் தக்க ஆதாரம் காட்டி நிரூபிக்க என்னுடைய நாட்டினரால் முடியாது"

என்று, ஜோர்டான் மன்னர் உசேன், பத்திரிகையாளர்களிடம் குறிப்பிட்டார்.

அரபு – இஸ்ரேல் போரின்போது பிரிட்டிஷ் விமானங்கள், இஸ்ரேலுக்கு ஆதரவாகப் புறப்பட்டு வந்ததை தன்னுடைய ராடார் கருவியில் கண்டதாக ஜோர்டான் மன்னர் உசேன் அறிவித்ததாகச் செய்தி வந்தது நினைவிருக்கலாம்.

உண்மை நண்பர்கள்!

பீகிங்கிலுள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்திற்குள்ளாகவே அடைக்கப்பட்டு சீனர்களின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளுக்குள்ளாகியிருக்கும் இந்திய அதிகாரிகள்—மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கான உதவிகளை ஓடோடிச் செய்துகொடுக்க முன்வந்த முக்கிய நாடுகள் எவை தெரியுமா?—

பிரிட்டன், பிரான்ஸ், யூகோஸ்லேவியா, இந்தோனேசியா, மற்றும் ஸ்காண்டிநேவிய நாடுகள்.

எகிப்து மற்றும் அரபு நாடுகளுக்குத் தற்போது சீனாவில் அரசியல் செல்வாக்கு அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மருத்துவமனைக்குப் பெரியார் நன்கொடை

சென்னை, ஜூன் 20—

திருச்சி மருத்துவ மனையில் புதிதாகக் குழந்தைகள் பிரிவு ஒன்று கட்ட, பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளார்.

இந்தப் பிரிவுக்கு, 'பெரியார்—மணியம்மை பிரிவு' என்று பெயரிடப்படும்.

இந்தத் தொகைக்கான 'செக்'கை 'விடுதலை' ஆசிரியர் திரு. வீரமணி, இன்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் அளித்தார்.

இந்தப் பிரிவு இந்த ஆண்டில் கட்டப்படும்.

மக்களவையில் மொழிக் குழப்பம்

தீர்வு காண அவைத் தலைவர் முயலுவாராம்

புதுடில்லி, ஜூன் 20—

மக்களவையில் திரு. ஜே. எச். பட்டேல் என்பவர் கன்னடத்தில் கேட்ட கேள்விக்கு உணவு—வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. எஸ். சிந்தே, மராத்தியில் மறுமொழி கூறியிருக்கிறார்.

சர்க்கரை இறக்குமதி தொடர்பாக அமைச்சர் அளித்த பதிலை அடுத்து இந்த உறுப்பினர் துணைக் கேள்வி எழுப்பினார்; இதைக் கேட்டதும், அவைத் தலைவரோ, 'கேள்வி கேட்ட உறுப்பினருக்கும் புரியாத—எனக்கும் புரியாத மராத்திமொழியில் அமைச்சர் ஏதோ சொன்னார்' என்று குறிப்பிட்டார்.

கே. இலக்கப்பா என்னும் உறுப்பினர், 'இந்தியிலும் ஆங்கிலத்திலும் கேள்வி கேட்கும் உறுப்பினர்களே அமைச்சரிடமிருந்து பதிலைப் பெறுகின்றனர்; இது, மற்ற மொழிக்காரர்களை அவமதிப்பதாக உள்ளது' என்று குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க விரைவில் எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்ட இருப்பதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

திரு. பட்டேல், தமது கன்னட மொழிக் கேள்வியை அவைத் தலைவர் புரிந்துகொண்டதாகக் கூறினார்.

அதற்கு அவைத் தலைவர், 'நான் புரிந்துகொண்டேன்; ஆனால் அமைச்சர் புரிந்துகொண்டிருக்கமாட்டார்; மேலும் இது சங்கடமான ஒன்றாகும்' என்றார்.

தியாகிகள் குடும்பங்களுக்கு உதவி

"விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகிகள் குடும்பங்கட்கு உதவிப் பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் மார்ச் 15-ஆம் நாள் வரை 5,206 விண்ணப்பங்கள் வந்தன; தியாகிகளின் மனைவியோ, பிள்ளைகளோ இந்த உதவியைக் கோரியிருந்தனர்; மார்ச் 21-ம் நாள் வரை 95 பேருக்கு உதவித் தொகை அனுமதிக்கப்பட்டது; 221 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன; மற்ற விண்ணப்பங்களும் விரைந்து ஆராய்ந்து பைசல் செய்யப்படும்."

இத்தகவலை, முதலமைச்சர் அண்ணா, சட்டமன்றக் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

சிறந்த வெற்றிகளைச் சாதிப்போம்!

ஒளிமிகுந்த எதிர்காலம் உண்டு!

'அரசியலில் நிதானமுள்ள பகுதி தமிழகம்'- முதலமைச்சர் அறிஞர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஜூன் 20—

" 'நமது நாடு, வறுமையும் வாட்டமும் மிகுந்த நாடு ; இங்கு கனி வளங்கள் குறைவு என்றாலும், புதிய தொழில்களைத் துவக்கி வெற்றி ஈட்டும் துணிவுடைய தொழிலறிந்தோர் பலரையும் நாட்டுக்கு இப்பகுதி வழங்கியுள்ளது' என்று திட்ட அமைச்சர் அசோக் மேத்தா அண்மையில் மேட்டூரில் கூறினர் ; கனி வளம் குறைவு என்ற கூற்றை நான் ஏற்கமாட்டேன் ; மேட்டூரில் பாக்சைட்டும் சேலத்து இரும்பும், திருச்சியின் ஜிப்சமும், ஒரு நூற்றாண்டுக் காலத்துக்குமேலும் வருமே ! இன்னமும் தோண்டியெடுக்கப்படாத ஏராளமான கனி வளங்கள் நம்மிடம் உள்ளன !

" அரசியலில் நிதானமும் நியாயமான நிர்வாக அமைப்பும் கொண்ட பகுதி இது ; நம்மைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்த ஏதேனும் ஒரு சக்தி குறுக்கே வந்தால் ஒழிய நாம் சிறந்த வெற்றிகளைச் சாதிப்போம் என்பது உறுதி ! ஒளிமிகுந்த எதிர்காலம் நம்முன் உள்ளது "

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சிம்சன் கூட்டுக் கம்பெனிகளில் ஒன்றான செம்பியம் 'இந்தியா பிஸ்டன்ஸ்' தொழிற்சாலையை—ரூபாய் ஐந்து கோடிச் செலவில் விரிவுபடுத்தியிருப்பதைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தெளிவுபடுத்தினார்கள்.

நிறுவனர் அனந்தராமகிருஷ்ணன் உருவச் சிலையை சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி திறந்துவைத்தார்.

தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஆய்வுக் கூடத்தையும் பயிற்சி நிலையத்தையும் திறந்துவைத்துப் பேசினர்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது :—

" இராணுவத் துறையிலும், அரசியல் துறையிலும் வளர்ந்துள்ள இதர நாடுகளின் வரிசையில் நாம் இல்லாதிருக்கலாம் ; ஆனால், தொழில்களுக்குத் தேவையான அறிவிலோ ஆற்றலிலோ நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர் !

" மத்திய அரசினரும் திட்டக் குழுவினரும் ஒரு திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு உரிய தேர்வு இடத்தை நிர்ணயிக்கிற போது, 'அந்த இடத்தைவிட மற்ற இடங்களிலும் அந்தத் திட்டத்தைத் திறமையாகச் செயற்படுத்த முடியுமா? சிக்கனமாக அத்திட்டத்தை நிறைவேற்ற முடியுமா?' என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்— ஆலோசிக்கவேண்டும்.

" பிலாய், துர்க்காபூர் போன்ற வட மாநிலங்களில் உள்ள நிறுவனத்தவர்கள், தென்னகத்தில் உள்ள பெரும் தொழில் நிறுவனங்கள் போட்டி மனப்பான்மையுடனும் சிக்கனத்துடனும் எப்படி நிர்வகித்து வருகிறார்கள் என்பதை, இங்கு வந்து பார்க்க வேண்டும்.

" தென்னகத்திலும் தொழில் திட்டங்களை நிறைவேற்ற ஏராளமான இடங்கள் இருக்கின்றன ; மேட்டூரும், சேலமும் திருச்சியும் அவற்றில் ஒரு சில என்பதும், தோண்டி எடுக்கவேண்டிய கனிச் செல்வங்கள் ஏராளமாக உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்."

கிராம மின்சார வசதிகளை விரைந்து பெருக்கும் நடவடிக்கை

தனியார் மின்வழங்கு நிறுவனங்களை அரசு மேற்கொள்ளுகிறது

தஞ்சாவூர் கழிமுகப் பகுதியில் உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்கும் நமது திட்டம் இறைவைப் பாசனத்திற்கு வேண்டிய மின்சார வசதியை நீட்டித் தருவதில் ஏற்பட்ட முன்னேற்றக் குறைவால் பெரிதும் தடைப்பட்டுள்ளது.

ஆதாய நோக்கத்தையே பெரிதும் கொண்ட தனிப்பட்ட மின்சாரம் வழங்கும் உரிமை பெற்றவர்களின் பொறுப்பில் இம் மாவட்டத்தின் பெரும் பகுதி உள்ளதால், வேளாண்மைப் பணிகளுக்காக மின்சார வசதியை விரிவாக்குவதில் அவர்கள் ஆர்வமுடையவர்களாய் இல்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் மின்சாரம் வழங்க உரிமை பெற்றவர்களுக்குக் கடன்கள் வழங்குவதன்மூலம், கிராமங்களுக்கு மின்சார வசதியைப் பெருக்குவதற்காக அரசு மிகவும் முயன்று வந்துள்ளது ; ஆனால், இதுவரை கண்டுள்ள முன்னேற்றம் கணிசமானதாக இல்லை.

உணவு உற்பத்தியின் பொருட்டு வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கும், கிணறுகளுக்கும் மின்சாரம் வழங்கும் அமைப்பை விரிவாக்கி, அதன் மூலம் இருபோகம் விளைவித்தலைப் பெருக்க மாபெரும் திட்டமொன்றை மேற்கொள்ளவேண்டியது மிகவும் இன்றியமையாதது என்பதை அரசு உணருகிறது.

எனவே, தஞ்சை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற கும்பகோணம் மின்சார வழங்கு உரிமம் 1930 ! நாகைப்பட்டினம் மின்சார வழங்கு உரிமம்—1933 ; மாயவரம் — மன்னார் குடி— திருவாரூர் மின்சார வழங்கு உரிமம் ; ஆகிய மூன்று தனிப் பட்டோர் உரிமங்களையும், காலதாமதம் ஏதுமின்றி, மேற்கொள்ளவேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது.

இம்முடிவிற்கிணங்க, தமிழக அரசினல், 1954 தமிழக மின்சாரம் நிறுவனங்களைக் கைவசமாக்கும் சட்டம் 4(1)-வது பிரிவின்கீழ், ஓர் அறிவிப்பு வெளியிடப்படும். உரிமம் பெற்றவர்களுக்கு அடுத்த நிதி ஆண்டில்தான் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டி வருமாதலால், நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கத்திற்கான வகை ஏதும் செய்யவேண்டிய தேவையில்லை.

—தமிழக அரசின் 1967—68-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில்

அண்ணாவின் 'பட்ஜெட்'-- ஓர் அரசியல் நோக்கு!

கழக அமைச்சரவையின் மையக் கருத்தினைப் பிரதிபலித்த கவர்னரின் உரைக்கு அடுத்த படியாக இப்போது அண்ணா அவர்கள் அளித்துள்ள நிதி நிலை அறிக்கை இந்திய அரசியலில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது !

நோய்க்கான மூலகாரணத்தைச் சொல்லி மருத்துவம் பார்க்கும் வைத்தியர்களைக் கண்டால், சில வியாதிக்காரர்களுக்குப் பிடிக்காது !

" வரவு-செலவுத் திட்டத்தில், மத்திய—மாநில உறவு முறை ஏன் ?" என்று கேட்கும் விமர்சகர்கள், ஒரு வகையில் அரசியல் நோயாளிகள்தான் !

" நிதி நிலை அறிக்கையின் துவக்கத்திலும், முடிவிலும் மத்திய அரசின்மீது குறைபட்டிருக்கிறாரே, முதலமைச்சர் ?" என்று. தனது தலையங்கத்தில் முறையிட்டுக் கொண்டிருக்கிறது ஓர் ஆங்கிலப் பத்திரிகை !

" புதுடில்லியின்மீது பழியைப் போடுவது, தப்பித்துக்கொள்வதற்கான வழியாகும் " என்று, முன்னாள் முதலமைச்சர்கூடப் பேசியிருக்கிறார் !

இவர்களுக்கெல்லாம் ஒரு பூர்வாங்கமான பாடத்தைச் சொல்லிக் கொடுக்கும் வகையில், அண்ணா அவர்கள், அரசியல் சட்டத்திலிருந்தே நிதி நிலை அறிக்கையை ஆரம்பித்திருப்பது, பாராட்டுதற்குரியதாக இருக்கிறது.

'நிதி நிலை அறிக்கைகளுக்கெல்லாம் அடிப்படை' என்று கருதப்படும் 'திட்டத் துறை' அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது எதிர்பார்த்திராதவகையில் தனது அதிகாரத்தை வளர்த்துக் கொண்டிருப்பதனை அண்ணா அவர்கள் நிதி நிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பது, பட்ஜெட் உரையினைத் தயாரிக்கும் மற்ற மாநில நிதி அமைச்சர்கள் மட்டுமல்ல—மத்திய நிதி அமைச்சரும்கூட நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

மத்திய அரசு—திட்டக் கமிஷன் என்ற இரு எல்லைகளுக்குட்பட்டுதான் எந்த மாநிலமும் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திட முடியும் என்பதை, 'கட்சிக் கட்டுப்பாடு' கருதித்தானோ என்னவோ—1967-ல் தோன்றியுள்ள மாற்றங்களுக்கு முன்பு வரையில் எந்தக் காங்கிரசு அமைச்சரவையுல் உணரவில்லை ! மக்களுக்கும் உணர்த்தவில்லை !

இப்போது அந்தக் கசப்பான உண்மையை, அண்ணா அவர்கள் தெரிவித்திருக்கிறார் !

கோயில் திருவிழா ஒன்றில் 'வழுக்கு மரம்' ஏறும் வைபவம் நடத்துவார்கள் ; அன்று முழுவதும் 'விரதம்' இருக்கும் பக்தர் ஒருவரை, வழவழப்பான மரத்தில் ஏறும்படிக் கூறி, கை கால்களுக்குப் பிடிபடாதவகையில் வழவழப்பான பொருள்களையும் கம்பத்தில் எடுத்து வீசுவார்கள் !

பணம் வெளியிடுதல்—அந்நியச் செலாவணி—பெரும் பகுதி வருவாய் போன்ற துறைகள் அனைத்தும், அரசியல் சட்ட அடிப்படையில் மத்திய அரசிடம் இருக்கிறது.

பணவீக்கம்—பற்றுக்குறை நிலை—பெரும் பகுதிச் செலவினங்கள் போன்ற தொல்லைகளை மட்டும் மத்திய அரசு, சரியாகப் பங்கு போட்டு எல்லா மாநிலங்களுக்கும் வழங்குகிறது !

இந்தப் 'பாதக' நிலைமைகளுக்கு இடையில் நின்றுதான் மாநில அரசு, ஏதேனும் சாதகங்களைச் செய்யவேண்டியிருக்கிறது என்பதனை, நிதிநிலை அறிக்கையில் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பது, கழக அமைச்சரவைக்குப் பரிதாப உணர்ச்சியைப் பெறுவதற்காக அல்ல—மாநில அரசுக்கு உள்ள குறைந்த அளவு அதிகாரங்களைச் சொல்லிப் பரிகாரம் காண்பதற்காகத்தான் !

" மாநில வளர்ச்சிக்காக இப்படியெல்லாம் வாதாடுவது, ஒற்றுமையைக் கெடுத்துவிடும் என்று கிலியூட்டும் பேச்சுக் கிளப்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை " என்ற எச்சரிக்கையினையும் தந்துவிட்டுத்தான் அண்ணா அவர்கள், அரசியல் சட்டக் குறைபாடுகளை வெளிப்படுத்தியிருக்கிறார் !

" நிதியைத் திரட்டுவது—பங்கிடுவது—செலவு ஆகிய எல்லாத் துறைகளிலும் மத்திய அரசு பெற்றுள்ள அதிகாரங்கள், மாநிலங்களைக் கையேந்தும் நிலையில் வைத்திருக்கிறது " என்று நிதிநிலை அறிக்கையில் எடுத்துக்காட்டியிருப்பதனை உணர்ந்த பின்னரேனும் மக்கள், புதிய அரசியல் சிந்தனைகளைப் பெற்று ஆவன செய்வதற்கு அண்ணா அவர்கள் வழி கண்டிருக்கிறார்கள் !

அரசியல் சட்டத்தின் 36 முதல் 38 வரை உள்ள விதிமுறைகளைச் சுட்டிக்காட்டி மத்திய அரசின் அதிகார பிரிவினைக் கூறியிருப்பது, 'பணம் வெளியிடுதலும், அந்நியச் செலாவணியும் மாநிலங்களுக்குத் தரப்படவேண்டும்' என்று வாதாடுவதாகக் கொள்ள வேண்டியதில்லை !

மேற்கூறிய அதிகாரங்களைச் சரிவரப் பயன்படுத்தாததனால், நாடு முழுவதும் விளையும் கேடுகளைக் களைவதில்தான் மத்திய அரசும் பங்கேற்க வேண்டும்—என்று கூறியிருப்பதன் மூலம், ஒத்துழைப்பினைக் கோருவதற்காகவே அண்ணா அவர்கள் உண்மை நிலையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பது வெளிப்படை !

1967 கொடுத்த ஆட்சி மாற்றம்தான், அண்ணா அவர்களின் நிதிநிலை அறிக்கை வாயிலாக இந்த அரசியல் சிந்தனைகளைக் கொடுத்திருக்கிறது !

—எஸ். ஆர்.

தலைமையமைச்சரானார் எகிப்து அதிபர் நாசர் !

கெய்ரோ, ஜூன் 19—

நாட்டின் அன்றாட நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்துச் செயலாற்றுவதற்காக ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து விலகி தலைமை அமைச்சராகியுள்ளார் நாசர் !

குடியரசுத் தலைவர் பதவி காலியாக இருக்கும்.

அமைச்சரவையிலும், இராணுவத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசின் உணவுப் பங்கீட்டில் வெட்டு ஏற்படும்?

புதுடில்லி, ஜூன் 19—

மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் உணவுப் பங்கீட்டில் எந்த அளவு வெட்டு ஏற்படும் என்பது அடுத்த மாதம் முதலமைச்சர்கள்–வேளாண்மைத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் தெரியக்கூடுமாம்.

ஜூலை 5, 6-ம் நாட்களில் முதலமைச்சர்கள், வேளாண்மை அமைச்சர்களின் மாநாடுகள் புதுடில்லியில் நடைபெறும்.

சூயஸ் கால்வாய் மூடப்பட்டதால் உணவுக் கப்பல்கள் நன்னம்பிக்கைமுனை வழியாக வரவிருக்கின்றன. இது தொடர்பாக ஏற்படும் உணவு நிலைமையைச் சமாளிக்க மத்திய உணவுக் குழு ஆய்வு செய்து வருகிறதாம்.

இந்த உணவு நிலைமையைச் சரிசெய்ய எல்லா மாநிலங்களிலும் கொள்முதலை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்ற ஏற்பாடு பற்றியும் விவாதிக்கப்படும்.

மாநில அரசுகளின் ஒருமித்த வேண்டுகோளை பரிவு காட்டி ஏற்க மத்திய அரசு மறுக்கிறது

கடன்--வட்டி செலுத்துவதில் கடுமையான விதிமுறைகளைத் திருத்தவேண்டும்

மத்திய--மாநில அரசுகளின் உறவு நிலை அண்ணா வலியுறுத்தல்

வரவு-செலவுத் திட்டத்தை இன்றைய அரசின் குறிக்கோள்களை நிறைவேற்றும் ஒரு கருவியாக விளங்கும் வண்ணம் உருவாக்கும் போது, நமது கூட்டாட்சி அமைப்பில் (Federal set up) எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்கவேண்டியுள்ளன என்பதை நாட்டத்திற் கொள்ளுதல் வேண்டும்.

அரசியலமைப்பின் விதித் துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங் கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒருபுறமிருக்க, கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை மெலியச் செய்து மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன.

அயல்நாட்டு வாணிபம், நாணயச் செலாவணிக் கொள்கை, கடன் கொள்கை முதலியன குறித்து, அரசியலமைப்பில் வகைசெய்துள்ள அதிகாரங்களின் கீழ், நமது பொருளாதாரம் முழுவதையுமே நெறிப்படுத்தும் பொறுப்பு மத்திய அரசிற்கே உரியதாக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசியலமைப்பில் குறிப்பிட்டுக் கூறப்படாது எஞ்சிய வரி விதிப்பு அதிகாரங்கள்)Re iduary Powers) உட்பட, நீட்சித் திறன்பெற்ற வருமான இனங்களின்மீது மத்திய அரசிற்குள்ள உரிமை வாய்ப்பின் மூலமும், தேசீய வருமானப் பெருக்கத்தின் பெருமளவு பங்கினை ஈர்த்துச் செல்லும் நிலையிலே அது உள்ளது.

இந்நிலைமை காரணமாக மாநிலங்கள் தங்கள் திட்டங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் விருப்பக் (Discretionary) கடன்களையும், உதவி மானியங்களையும் எதிர்நோக்கி நிற்கும் நிலையில் உள்ளன.

பொதுக் கடன்கள் மூலம் மாநில அரசுகள் நிதி திரட்டி, தங்கள் நிதி வளத்தைப் பெருக்கிக் கொள்வதிலும், அரசியலமைப்பின் 293-வது பிரிவில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம் நேரடியாகவும், ரிசர்வ் பாங்கியின் மூலம் மறைமுகமாகவும், அக்கடன்கள் எந்த நிபந்தனைகளுக்கும், வரையறைகட்கும் உட்பட்டுத் திரட்டப்படலாம் எனக் கட்டுப்படுத்தும் உரிமையுடன் மத்திய அரசு விளங்குகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மாநிலங்களின் நிதித் தேவைகளைப்பற்றி நிதிக் குழுக்களின் வாயிலாக நடுவுநிலையில் நின்று ஆராய வேண்டுமென்கிற ஏற்பாடும், அக்குழுக்களின் ஆய்வு வரம்பு குறித்து விதிக்கப்படும் பல்வேறு வரையறைகள் காரணமாக மாநிலங்கள், மத்திய அரசினை அண்டி நிற்கும் நிலை பெருமளவில் குறைந்தபாடில்லை.

ஒவ்வொரு நிதிக் குழுவின் தீர்ப்பு வாயிலாகவும் மாநில அரசுக்குக் கூடுதல் நிதி வசதி கிட்டுவது உண்மையே; எனினும், இதற்கிடையே உள்ள காலத்தில் மாநிலங்களுக்கு ஏற்படுகிற புதிய தேவைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லாத குறையால், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் கூடுதல் தொகை இச்செலவினை ஈடு கட்டுவதற்கே போதுமானதாக இல்லை என்பதே மாநிலங்களின் அனுபவமாகும்.

இக்கருத்தை அரண் செய்யும்வகையிலே சான்று ஒன்று காட்ட விரும்புகிறேன். நான்காவது நிதிக் குழுவின் தீர்ப்பின்படி, தமிழகத்திற்கு நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 64 கோடி அளவிற்குப் பயன் கிட்டியுள்ளதெனக் கணக்கிடப்பட்டுள்ளது; ஆனால், 1966 ஏப்ரல் 1-ம் நாள் முதல் நிதிக் குழுவின் தீர்ப்பு செயலுக்கு வருவதற்கு முன்பே, மத்திய அரசு விலைவாசி ஏற்றத்தையொட்டித் தனது ஊழியர்களின் அகவிலைப் படி வீதங்களை உயர்த்த வேண்டியிருந்தது; நாமும் நமது ஊழியர்களுக்கு நியாயம் வழங்கவேண்டி, கடந்த ஆண்டில் இருமுறை அகவிலைப் படி வீதங்களை உயர்த்தவேண்டி வந்தது.

அகவிலைப்படி வீதங்களை இவ்வாறு இருமுறை உயர்த்தியதால், நான்காம் திட்டக் காலத்தில் வருமானக் கணக்கில் ஏறத்தாழ ரூ. 45 கோடிக்குக் கூடுதல் பொறுப்பு ஏற்பட்டு, அதன் வாயிலாக நான்காம் நிதிக் குழுவின் தீர்ப்பிலிருந்து கிடைத்த நன்மைகளைத் துடைத்துவிட்டது!

தமிழக அரசு உட்பட பெரும்பாலும் எல்லா மாநிலஅரசுகளும், மத்திய அரசிடமிருந்து நிதி வசதிகளை மாநிலங்களுக்கு மாற்றுகிற இன்றைய ஏற்பாடுகளிலுள்ள குறைபாடுகளை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளன. ஆனால், மாநிலங்களின ஒன்றுபட்ட இவ்வேண்டுகோள் நியாயமானதாயிருப்பினும், மத்திய அரசு பரிவு காட்டி இதை ஏற்கவில்லையென்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

மாநிலங்கள் கவலை தெரிவித்துள்ள மற்றொரு பிரச்சினை, மாநில வரவு-செலவுத் திட்டங்களில் கடன் பொறுப்புகள் மென்மேலும் பெருகிக்கொண்டே போவதே.

1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் நாளன்று, அன்றைய மாகாண அரசுகள் மத்திய அரசுக்குச் செலுத்தவேண்டிய மொத்தக் கடன் 43 கோடியே 97 இலட்சம் ரூபாய் மட்டுமே; ஆனால் நடப்பு ஆண்டின் இறுதியில், மாநில அரசுகள் மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை ரூ. 5000 கோடி அளவில் நிற்கும்.

1950-ல் இம்மாநிலம் இந்திய அரசிற்குச் செலுத்த வேண்டிய கடன் ஏறக்குறைய 12 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவில் மட்டுமே. இருக்க, இப்போது ரூ. 800 கோடிக்குமேல் உயர்ந்து நிற்கிறது.

இந்திய அரசிற்குச் செலுத்தவேண்டிய வட்டித் தொகை 1950—51-ல் 41 இலட்ச ரூபாயாக இருந்தது; அது இப்போது 14 கோடி ரூபாய்க்குமேல் உயர்ந்துள்ளது.

இந்திய அரசிடமிருந்து சட்டபூர்வமாக நமக்குக் கிட்டும் உதவி —அதன் விருப்ப மானியங்கள் வாயிலாக இந்த அரசு பெறும் உதவி —இவற்றின் பயன், இவ்வட்டித் தொகை உயர்வினால் பெரிதும் கிட்டாமற் போய்விடுகின்றது!

மாநில வரவு-செலவுத் திட்டங்களில் வளர்ந்துவரும் இக்கடன் பொறுப்பு, நிதிக் குழுக்களின் நாட்டத்தையும் கவர்ந்துள்ளது. மூன்றும் நிதிக் குழு தனது அறிக்கையின் 100-வது பத்தியில், மாநிலங்கள் தாங்களே எழுப்பும் கடன்களுக்காகவும், இந்திய அரசு வழங்கியுள்ள கடன்களுக்காகவும் அவற்றின்மீது வந்துசேரும் பெரும் வட்டிப் பொறுப்பைப் பற்றிக் குறிப்பிட்டு, **'பெரும்பாலான மாநிலங்களில் இவ்வட்டிப் பொறுப்பே அவற்றின் நடப்பு வருமானத்தில் பெரும் பகுதியை விழுங்கிவிடுகிறது; வருங்காலத்தில் இந்நிலை மேலும் சீர்கேடு அடையும்' எனக் கூறியுள்ளது. இக்கூற்று இன்று உண்மையாகிவிட்டது.**

1950—51-ல், நம் மாநில வரி வருமானத்தில் 3.5 சதவீத அளவில் மட்டுமே நின்ற வட்டிச் செலவுகள், 1966—67-ல் 20 சதவீதத்திற்குமேல் சென்றுவிட்டன; நடப்பு ஆண்டில், இது 23 சதவீத அளவிற்கு உயரும்.

கடன்களைத் தீர்ப்பதற்கும், வட்டி செலுத்துவதற்கும் போதிய அளவு ஆதாயம் தருகிற திட்டங்களில் மட்டுமே முதலீடு செய்ய வேண்டுமென்கிற கண்டிப்பான பழம்பெரும் நிதி இலக்கணத்திற்கிணங்க இக்கடன் தொகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தால், கடன் வளர்ச்சியினிலோ, வளர்ந்துவரும் வட்டிச் செலவுகளினாலோ நமக்குக் கவலைக்கு இடமிராது.

ஆனால், துரதிருஷ்டவசாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின் கட்டாயத்தினால் நேரடி ஆதாயத்தைக் கருதி மட்டுமே தேர்ந்தெடுக்காமல், அவை பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றனவா —மறைமுகமாகவேனும் உதவுகின்றனவா என்பதைக் கருதியே திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

மாநில அரசுத் துறையில் செய்யப்படும் முதலீட்டுச் செலவின் பெரும் பகுதி—பாசன வசதிகள், பொருளாதார- -சமூகப் பணிகள், மருத்துவப் பணிகள் இவற்றை உருவாக்குவதற்கென்றே செலவிடப்படுகின்றன.

இத்தகைய செலவினங்கட்கு நிதி உதவுவதற்கென ஏற்பப்படும் கடன் பொறுப்புகள், இயல்பாகவே தாமே தீர்த்துக்கொள்ளும் (Self liquidating) தன்மையுடையன அல்ல: எனவே, மாநிலங்களின் வருமான நிதி நிலையில் அவை இடர்ப்பாடு விளைவிக்கின்றன.

ஆகவே, மாநிலத் திட்டங்களில் மூலதன முதலீடாகக் கூறப்படுவதன் கணிசமான பகுதி, ஆதாயம் அளிக்காத நிலையிலுள்ளதை இந்திய அரசு கருத்திற்கொண்டு, வட்டி வீதம் பற்றியும், திருப்பிச் செலுத்தவேண்டிய தவணைத் தொகைகளின் கால அட்டவணைபற்றியும் தற்போதுள்ள கடுமையான விதிமுறைகளைத் திருத்தியமைப்பதன்வாயிலாக மாநிலங்களுக்குத் துயர் தணிப்பு அளிப்பது இன்றியமையாததாகும்.

மாநில வரவு-செலவுத் திட்டங்களில், வட்டி வரவினங்களுக்கும் —வட்டிச் செலவுகளுக்கும் இடையே விழும் துண்டு மேன் மேலும் விரிவடைந்து வருகிறது.

1962—63 வரை நமது மாநில வரவு-செலவுத் திட்டத்தில் திட்ட வகையில் கிட்டிய வரவினங்கள், வட்டிச் செலவுகளைவிடக் கணிசமாய் உயர்ந்திருந்தன. அதன் பின்னர், இந்நிலையில், மாற்றம் ஏற்பட்டு, 1965—66 முதல் மோசமாகிவிட்டது.

1966—67-ல், வட்டி வரவினங்களுக்கும்—வட்டிச் செலவுகளுக்கும் இடையே விழுந்துள்ள துண்டு ரூ. 5 கோடி அளவில் நின்றது.

கடன் செலவுகளின் நிமித்தம் மாநில அரசுகளின் பெருகிவரும் பொறுப்பினைக் குறித்து அவற்றின் முறையீடுகளைக் கேட்ட நான்காம் நிதிக்குழு, தன் அறிக்கையின் 114-வது பத்தியில் பின்வருமாறு பரிவுரை வழங்கியுள்ளது.

" மாநிலங்களின் கடன் பொறுப்பு—தற்போது அவை கடன் வாங்கும் முறை—வட்டி செலுத்துதல்—கடனைத் திருப்பிச் செலுத்துதல்—கணக்கு எழுதிவரும் முறைகள் ஆகிய இவற்றைத் தக்க தனிக் குழு ஒன்று நிறுவி, விரிவாக ஆராய்ந்து தரும் அதன் அறிக்கையின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.''

மாநிலங்களின் கடன் பொறுப்பினைக் குறித்து அதன் எல்லாக் கூறுகளிலும் ஆய்வு செய்வதற்காக, மேலும் கால நீட்டம் செய்யாமல், அத்தகைய வல்லுநர் குழு ஒன்றை நிறுவ வேண்டுமென நாங்கள் பெரிதும் வற்புறுத்துவோம்.

—தமிழக அரசின் 1967–68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்

உண்மையை ஒப்புக்கொள்கிறார் காங்கிரசு உறுப்பினர்

கோழிப் பண்ணை பேரால் நடக்கும் பண விரயம்

சென்னை, சூன் 20—

" கோழிப் பண்ணைகளில் பல அதிகாரிகள் இருக்கிறார்கள்; முட்டையிடுவதைக் கண்காணிக்க ஓர் அதிகாரி—அவற்றைத் தரம் பிரிக்க ஓர் அதிகாரி—விற்க ஓர் அதிகாரி—என்று இப்படிப் பல அதிகாரிகள் இருப்பதால் செலவு கூடி, கோழிப் பண்ணைகளில் உற்பத்தியாகும் ஒரு முட்டைக்கு ரூ 1½ வரை செலவாகிறது; இதைத் தவிர்க்க ஆவன செய்யப்படுமா?"

என்று சட்டமன்றத்தில் காங்கிரசு உறுப்பினர் கே. விநாயகம் கேட்டார்.

அண்ணா :—" தேவையற்ற அதிகாரிகள் பலர் இருப்பதை மாண்புமிகு உறுப்பினரே ஒப்புக்கொண்டது குறித்து மிக்க மகிழ்ச்சி! தேவையற்ற நிலையில் ஆட்குறைப்புச் செய்யப்படும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலேயோ வெளியிலேயோ, தனியாகவோ கூட்டாகவோ எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருப்பார் என்று நம்புகிறேன்.''

உயர்நிலைப் பள்ளிகள்

மாநகராட்சி துவக்குகிறது

சென்னை, சூன் 19—

சென்னை மாநகராட்சியின் 7 உயர்நிலைத் துவக்கப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் திட்டத்துக்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துவிட்டது.

ஏற்கனவே மாநகராட்சி 21 உயர்நிலைப் பள்ளிகளை நடத்திவருகிறது என்பது நினைவுகூரத்தக்கது.

கீழ்க்கண்ட இடங்களில் உள்ள மாநகராட்சி உயர் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படும் :—

இராயபுரத்திலுள்ள சூரியநாராயண செட்டித் தெரு, ஆர்தூன் ரோடு, பூங்கா நகரில் உள்ள எடப்பாளையம்; திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ஸ் ரோடு முதல் சந்து; புதுப்பாக்கம் (பெண்கள் பள்ளி); மயிலை காரணீசுவர் கோயில் தெரு; சைதாப்பேட்டை மேற்கு சி.ஐ.டி. நகர்; புரசை–குயப் பேட்டை சச்சிதானந்தம் தெரு.

குறைந்த நிதி வசதியிலும் புதிய திட்டங்கள்

மருத்துவ—பொதுச் ; சுகாதாரத் துறைகளின்கீழ், செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகளுக்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், கருவிப் பொருள்கள் வழங்குவதற்கும் மொத்தம் ரூ. 41 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,075-லிருந்து 1,125 ஆகக் கூட்டப்பட்டுள்ளது.

இத்துறையில் நமது தேவைகள் மிக அதிகமாயிருப்பினும், கிட்டியுள்ள குறைந்த நிதி வரம்பிற்குள் பல புதிய திட்டங்களுக்கு வகைசெய்திருக்கிறோம்.

இத்திட்ட விவரங்களை, வரவு-செலவுத் திட்டக் குறிப்பின் பொருத்தமான இணைப்புக்களில் காணலாம்.

இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் பற்பல நகர நீர் வழங்குத் திட்டங்களுக்காக, ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்துறையில் ரூ. 40 இலட்சம் செலவில் ஆம்பூர் நகர நீர் வழங்குத் திட்டத்திற்கும், ரூ. 28.48 இலட்சம் செலவில் திருப்பத்தூர் (வட ஆர்க்காடு) நகர நீர் வழங்குத் திட்டத்திற்குமாக இரு புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

—தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில்

வட்டத்துக்கொரு தொழிற்பேட்டை

இவ்வாண்டில் 8 இடங்களில் ஏற்படும்

சென்னை, சூன் 20—

" இந்த ஆண்டில் மேலும் 8 தொழிற்பேட்டைகளை நிறுவத் தமிழக அரசு சிந்தித்து வருகிறது ''

என்று தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

".இப்போது தமிழகத்தில் 36 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன; ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும்.

" நாகப்பட்டினம், கடலூர், திண்டிவனம், வடலூர், சென்னை, மேட்டூர் ஆகிய இடங்களில் இவ்வாண்டு புதிதாக நிறுவ இருக்கும் 8 தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது."

சட்டமன்றத்தில் கேள்வி நேரம்

சென்னை, சூன் 20—

இன்று சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் கேட்ட பல்வேறு கேள்விகட்கும் தொடர்புடைய அமைச்சர்கள் அளித்த பதில்கள் வருமாறு :—

கதர்

கேள்வி :—ஊழியர்களுக்குக் கட்டாயப்படுத்திக் கதர் விற்பனை செய்யப்படுகிறதா?"

அமைச்சர் முத்துசாமி :–இல்லை.

ஈ.ஆர். கிருஷ்ணன்:—எங்கள் ஊராட்சி ஒன்றிப்பில் கட்டாயப்படுத்தி கதர் விற்பனை செய்யப்பட்டிருப்பது அரசினருக்குத் தெரியுமா?

அமைச்சர் :—அப்படிப்பட்ட புகார்கள் வந்திருப்பதால் தான், இனிக் கட்டாயப்படுத்தக்கூடாது என உத்தரவிடப் பட்டுள்ளது.

காங்கிரசு உறுப்பினரின் கேள்வி ;—கதர் பற்றி இந்த அரசின் கருத்து என்ன ?

அண்ணு :—கதர் அபிவிருத்தி என்பது முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்ட ஏற்பாடாகும். உண்மையில், 'பொருளாதாரப் பயன் உள்ளது' என்ருே, 'பயன்படுத்த வசதி மிக்கது' என்ருே அதனைக் கொள்ளவில்லை. :அரசியல் பெருந்தன்மை கருதியே அதகுத் தொடர்ந்து உதவி செய்து வருகிருேம்.

தியாக மானியம்

கேள்வி :—சிலர் பொய்யான தகவல்களைக் கொடுத்துத் தியாக மானியம் பெற முயலுகிருர்கள்; அப்படித் தரப்படும் உதவி நிறுத்தப்படுமா ?

அண்ணு :—எல்லாவிதக் குற்றங்களுக்கும் கொடுக்கப்படும் தண்டனையே அவர்களுக்கும் உண்டு.

கேள்வி :— 'தியாக மானியம்' பெறுவதற்கான தகுதிகள் என்ன ?

அண்ணு :—அந்தத் தியாகிகள் வாழ்ந்த இடத்திற்குச் சென்று தகவல் அறியப்படும். உண்மையிலேயே, 'யாருடைய உதவியும் இல்லாமல் இருக்கிருர்களா' என்று விசாரித்து அறியப்படும். அதன் பிறகு, 'தியாகிதானு ? அப்படியானுல் எந்தச் சிறையில் இருந்தார் ?' என அறிந்து, சம்பந்தப்பட்ட சிறையில் இருக்கும் பதிவேடுகளைப் பரிசீலித்து 'கொடுக்கப்பட்ட தகவல்களெல்லாம் உண்மைதானு' எனக் கண்டறியப்படும்.

கேள்வி :—தியாகிகள் நிலத்தைப் பலர் ஆக்கிரமித்துக் கொள்கிருர்கள் ; அவர்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

அண்ணு :—யாருடைய நிலத்தில் யார் ஆக்கிரமித்தாலும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரைப்படத் தொழில்

கே. விணுயகம் :— தமிழ்நாட்டில் திரைப்படத் தொழிலை அரசாங்கமே ஏற்று நடத்தச் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

அமைச்சர் சத்தியவாணி முத்து :—இல்லை.

அடுத்து கே. விணுயகம் கேட்ட கேள்விக்கு முதலமைச்சர் அண்ணு அவர்கள் பதிலளித்ததாவது :—

"நாங்கள் எங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருப்பது, சினிமாக்கொட்டகைகளைப் பற்றித்தானேயன்றி, சினிமா ஸ்டுடியோக்களைப் பற்றியல்ல. சினிமாத் தொழில் என்பது, சினிமா ஸ்டுடியோவைப் பொறுத்ததாகும். சினிமாத் தொழிலை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம் ; ஒன்று—சினிமா ஸ்டுடியோ நடத்துவது ; இரண்டாவது—சினிமாவிலே நடப்பது. இரண்டாவது பகுதிக்கு மாண்புமிகு உறுப்பினர் விணுயகம் அவர்கள் வரமாட்டார் என நினைக்கிறேன். அவரும் நானும் நடித்து அரசாங்கத்துக்கு நஷ்டத்தை ஏற்படுத்த விரும்பமாட்டோம்.

"ஸ்டுடியோவை அரசு ஏற்படுத்த வேண்டும் என்பது நல்ல யோசனைதான் ; அதைச் செய்யலாம் என்ற எண்ணமும் எனக்கு உண்டு. வேருெரு மாநிலத்தில் அரசே ஒரு ஸ்டுடியோவை ஏற்படுத்தியிருக்கிறது ; அது எப்படி இயங்குகிறது என்பதைப் பார்த்து, அதன் பிறகு இங்கே சினிமா ஸ்டுடியோக்களை ஏற்படுத்துவதுபற்றி யோசிக்கலாம்.

கேள்வி :—பூனுவில் இருப்பதைப் போல் சினிமாத் தொழிற் பயிற்சி தரும் கல்லூரி இங்கும் ஏற்படுத்தப்படுமா ?

அண்ணு :—இதில் தனிப்பட்ட முறையில் எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. நடிக்கக் கற்றுக்கொடுக்க ஒரு பள்ளியை ஏற்படுத்துவதைவிட நாட்டில் நடைபெறும் நாடகங்களுக்கும், நலிந்துவரும் நாடகத் துறைக்கும் நல்ல முறையில் ஊட்டமளித்தால் அதிலிருந்து நல்ல நடிகர்கள் கிடைப்பார்கள். நடிப்பு என்பது வகுப்பறையில் வைத்துச் சொல்லிக்கொடுப்பதல்ல. அப்படி இருக்குமானுல், சிலப்பதிகாரத்தில் வரும் நாடக இயல்புகளை நம் தமிழாசிரியர்களே சொல்லிக் கொடுத்துவிடலாம்.

கேள்வி :—திரைப்பட அரங்குகளை அரசு ஏற்குமா ?

அண்ணு :— திரைப்பட அரங்குகளை அரசு ஏற்றுக்கொள்வது எப்போது என்ருல், 'அரசு ஏற்பது நியாயம்' என்ற எண்ணம் மக்களிடம் தோன்றும்போது!

குப்பம்மாள் : — திரைப்படத்தில் ஆபாசக் காட்சிகளுக்குத் தடை விதிக்கப்படுமா ?

பதில் :—'ஆபாசம்' என்பது எது என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலவில்லை, உறுப்பினர் ஆபாசமாகக் கருதும் படத்தைப் பற்றி படம் எடுப்பவர்களுக்கே எழுதியனுப்பலாம்.

கேள்வி :—நிரந்தரமான திரையரங்குகள் உள்ள இடத்துக்கு அருகில் டூரிங் சினிமாக் கொட்டகைகள் வைக்க அனுமதிப்பதில்லை. இந்த நிபந்தனை தளர்த்தப்படுமா ?

பதில் :—இதுபற்றி இதுவரை யோசிக்கவில்லை ; இனி யோசிப்போம்.

கே. விணுயகம் :—சென்னை நகரில் சினிமாக் கொட்டகைகளில் புகை பிடிப்பது தடுக்கப்படுவது போலவே வெளியூர்க் கொட்டகைகளிலும் தடை செய்யப்படுமா ?

அண்ணு :—மாண்புமிகு உறுப்பினருக்கு சென்னையைத் தவிர்த்து, வெளியூரின் அனுபவம் ஏற்படவில்லை என நினைக்கிறேன். எல்லா ஊர்களிலும் இப்போதே இந்தத்தடைஇருந்து வருகிறது.

இரயில் பாதைகள்

கேள்வி :—தமிழக அரசு பரிந்துரைத்துள்ள புதிய இரயில் பாதை அமைப்புத் திட்டங்களில் நெல்லை—குமரித் திட்டத்துக்கு முதற்சலுகை அளிக்கப்படுமா ?

அமைச்சர் கருணுநிதி :—நான்காம் திட்டத்தில் சேர்க்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ள பாதைகள் அனைத்தும் ஒரே சீராகவே ஆனுல் விரைவாக நிறைவேற்ற வற்புறுத்தப்படும்.

கேள்வி :—திண்டுக்கல்—கடலூர் பாதை நீண்ட காலப் பரிசீலனையில் உள்ளது ; அதுபற்றிக் கவனிக்கப்படுமா ?

பதில் :—அதுபற்றியும் பரிசீலிக்கப்பட்டுள்ளது.

கேள்வி :—தஞ்சை — பட்டுக்கோட்டை இரயில் பாதை அமைக்கும் திட்டமும் சேர்க்கப்படுமா ?

மு. கருணுநிதி :—நான்காம் திட்டத்தில் 11 திட்டங்கள் சர்வே செய்யப்படும் ; அதில் ஒன்று தஞ்சை — பட்டுக்கோட்டை பாதை.

கருநாடக மாநில தி. மு. கழகம்

சர்வகட்சி போராட்டம்

கருநாடக சட்டமன்றம் இத்திங்கள் துவங்கும் 26—6—67-ம் நாளன்று, விலைவாசி உயர்வு—மாநகராட்சிக் கலைப்பு—சைக்கிள் வரி நீக்கம்—தண்ணீர் வரி உயர்வு—மூடப்பட்ட மில்களைத் திறக்கக் கோரிக்கை—வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பிரச்சினைகளைக் குறித்து, கருநாடக மாநிலத்திலுள்ள 11 எதிர்க் கட்சிகளும் ஒன்ருகச் சேர்ந்து நடத்தும் 'விதான சௌதா சலோ' (சட்டமன்றம் நோக்கிப் புறப்படுவோம்) போராட்டம் நடக்கவிருக்கிறது.

அன்று காலை 11-மணிக்கு எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஊர்வலமாகச் சென்று சட்டமன்றத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தும்.

கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும், 26—6—67 காலை 11-மணிக்கு சிவாஜி நகர் சதுக்கத்திற்கு கொடிகளுடன் வருகைதந்து ஊர்வலத்தில் பங்கு பெற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டும் சிறப்பிக்குமாறு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தி. திராவிடமணி
அமைப்பாளர்,
கருநாடக மாநில தி.மு.க.

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

சென்னை, சூன் 20—

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 22—6—67 காலை 6-மணிக்கு சென்னையிலிருந்து கார் மூலம் புறப்பட்டு 7-30 மணிக்குக் காஞ்சீபுரம் அடைவார்; அங்கு கூட்டுறவு நூற்பாலையில் நூல் கிடங்கைத் திறந்துவைப்பார் ; பின்னர் அங்கிருந்து காலை 9-மணிக்குப் புறப்பட்டு சென்னை வந்தடைவார்.

வெ கண்ணன் நிகழ்ச்சிகள்

சூன் 23 : எ. ரெட்டியபட்டி ; 24 : பவானி ; 25 : சேத்தூர் ; 29: வடகரை ; 30 : குறிச்சியார்பட்டி.

கேள்வி :— இங்கே இரயில்வே அமைச்சர் யார் ?

பதில் :— இங்கே இரயில்வே அமைச்சர் இல்லை — போக்குவரத்துத் துறை அமைச்சர்தான் உண்டு.

கோழிப்பண்ணையில் குளிர்சாதன வசதி!

டி.எஸ். ஆதிமூலம் (சுதந்) :— "கோழிப் பண்ணைகளுக்கென்று பல கட்டிடங்கள் உண்டு ; அவற்றைப் பார்க்கும்போது, டில்லி அசோகா ஓட்டலைப்போல் காட்சியளிக்கின்றன ; அவற்றில் குளிர்சாதன வசதிகளும் இருக்கின்றனவா?"

அமைச்சர் கோவிந்தசாமி :— "சில இடங்களில் குளிர் சாதன வசதிகளும் உண்டு ; அதிலும் குறிப்பாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில்தான் அதிகம்."

கோழிப் பண்ணைகளின் எதிர்காலம்?

"கோழிப் பண்ணைகள் எப்படிச் செயல்படுகின்றன ; அதனுல் ஏற்படக்கூடிய பயன்கள் என்ன என்பதை ஆராய அதிகாரச் சார்பற்ற மூவர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும். குழுவின் அறிக்கை கிடைத்த பின் அரசு ஏற்ற முடிவு செய்யும் "

என்று வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, சட்டமன்றக் கேள்வி நேரத்தின் போது அறிவித்தார்.

தமிழகத்திற்குப் புதிய இரயில் பாதைகள்

நான்காம் திட்டத்தில் சேர்க்க மாநில அரசு பரிந்துரை

சென்னை, சூன் 20—

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு தமிழ்க அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ள புதிய ரயில் பாதை அமைப்புத் திட்டங்களை, தமிழகச் சட்டமன்றத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணுநிதி அறிவித்தார்.

அந்தத் திட்டங்கள் வருமாறு :—

சென்னை — அரக்கோணம், சென்னை — கும்மிடிப்பூண்டி பாதைகளை மின்சாரப் பாதைகளாக மாற்றுதல் ; திண்டுக்கல்லிலிருந்து கரூர் வழியாக திருச்சிக்கு அகல இரயில் பாதை அமைப்பதுடன், விழுப்புரத்திலிருந்து மற்ருேர் அகலப் பாதை செங்கற்பட்டுக்கு அமைத்தல் ; திருச்சி—விழுப்புரம் இடையே உள்ள பாதையை அகலப் பாதையாக மாற்றுவது ; திண்டுக்கல்லிலிருந்து மதுரை வழியாகத் தூத்துக்குடிக்கு அகலப் பாதை அமைத்தல் ; திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்கும், அங்கிருந்து திருவனந்தபுரத்துக்கும் புதிய பாதை அமைத்தல்.

மேற்கண்டவையல்லாமல் மற்றும் 11 புதிய பாதைகள் அமைப்பதற்கான 'சர்வே' செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நடக்க இருப்பவை

22--6--67

சென்னை 4-வது வட்டம்

எம்.ஜி.ஆர். மன்ற மூன்ரும் ஆண்டுவிழா; இரவு 7 மணிக்கு சஞ்சீவராயன் கோயில் தெருவில்; தலைவர்: எம். சுந்தரம்: பேசுவோர்: அமைச்சர் கே.ஏ. மதியழகன், எஸ்.முத்து எம்.எல்.சி., என்.வி.என். சோமு பி.ஏ., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., கே.எம். கண்ணபிரான், பி.கே. மூர்த்தி.

சென்னை 22-வது வட்டம்

தி.மு. கழக ஆதரவாளர்கள் சார்பில் இரவு 7 மணிக்கு தியாகராயர் உயர்நிலைப் பள்ளி அருகில்; தலைவர்; முத்துக்கிருட்டினன்; பேசுவோர்: ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., க. அறிவழகன் எம்.ஏ., துரைமுருகன் பி.ஏ., என்.வி.என். சோமு, பி.ஏ., எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., ம. மோகனரங்கம் எம்.சி., ந. இளமாறன்.

சென்னை 8-வது வட்டம்

மக்கள் மன்ற 8-வது ஆண்டு விழா; தலைவர்: சச்சிதானந்தம்: பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், இளம்பரிதி, கு. இராமலிங்கம் எம்.சி., இரா.மு. மனோகரன், பி.கே. மாரியப்பன், தி.நா. மதிவாணன், சி. சந்திரன்.

பள்ளிப்பட்டு

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு ; தலைவர் : பி. கோவிந்தராசன் ; பேசுவோர் : அமைச்சர் எம். முத்துச்சாமி, ஆர். என். அரங்கநாதன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., டி. கே. பொன்னுவேலு பி.ஏ., வி. கே. குப்புசாமி, ஏ. பரந்தாமன் பி.எஸ்சி., எஸ். இராமலிங்கம்.

திருத்தணி

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிகளு ; தலைவர் : வி. ஆறுமுகம் ; பேசுவோர் : அமைச்சர் எம். முத்துச்சாமி, டி. கே. பொன்னுவேலு பி.ஏ., டி. திருமலை, ஏ. பரந்தாமன் பி.எஸ்சி., என். ஏ, ரஷீத், பி. கோவிந்தசாமி, புலவர் நடேசன், எஸ். இராமலிங்கம், ஏ. பி. சாமி.

23--6--67

ஒரத்தநாடு

அண்ணு மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு கோமுட்டித் தெருவில் ; தலைவர் : பி. கே. தீரன் ; பேசுவோர் : சி. தமிழரசி பி.ஏ., எல். கணேசன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ,, வே. இராமச்சந்திரமூர்த்தி, ஜி. ஆர். இராசன்.

மருத்துவமனையில் மு. சின்னச்சாமி

ஈரோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு. சின்னச்சாமி அவர்களுக்கு மார்புவலி ஏற்பட்டு, ஈரோடு அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்ருர்.

உதவி உண்டு!

சென்னை, சூன் 20—

"நாட்டு விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்ட தியாகிகளுக்கு ஏற்கனவே தியாகி நிலம் கொடுக்கப்பட்டிருந்தாலும், இப்போதைய அரசின் திட்டப்படி உதவிப் புணம் அளிக்கப்படும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள் சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பட்டார்.

'நம் நாடு'
நாளைய இதழில்
★
'அண்ணுவின் பட்ஜெட்— ஓர் பொருளாதாரக் கண்ணேட்டம்'
என்ற கட்டுரை இடம்பெறும்

குழுக் கூட்டம்

சென்னை 9-வது வட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம், 23—6—67 இரவு 7-மணிக்கு கழகப் பணிமனையில், மாவட்டப் பிரதிநிதி எஸ். பி. பிச்சையா தலைமையிலும்—பகுதிச் செயலாளர் பி. கே. மாரியப்பன் முன்னிலையிலும் நடைபெறும்.

ரோஜா
பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

புதிய முகவரி
புலவர் பொன்னிவளவன்,
28/29, நாராயணசராங் [தோட்டத் தெரு
சென்னை-1.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.